# “பிச்சிப்பூ” நாவலில் பொருள் சாராப்பண்பாடு

# Porul Saaraa Panbaadu in ‘Pichipoo’ Novel

***திருமதி சு. வினோதா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

**Mrs. S. Vinotha**
*Assistant Professor in Tamil*
*Sona College of Arts of Science College, Salem*

**ஆய்வுச் சுருக்கம்**

*எழுத்தாளர் பொன்னீலன் படைப்புகளுள் பதிவாகியுள்ள குமரி மாவட்டத்து மக்களின் பண்பாட்டுச் சாராம்சமான பொருள் சாராத் தரவுகளை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும். பொருள் சாராப்பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள் அடங்கும். மக்களின் கருத்துகள், பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், அறிதிறன், அழகியல் சிந்தனைகள், கட்டுப்பாடுகள், விலக்குகள், வணக்கம் செலுத்தும் முறை, வழிபாட்டு முறைகள் போன்றவை பொருள் சாராப்பண்பாட்டை அளக்க உதவும் அளவீடுகள் ஆகும். பொன்னீலனின் பிச்சிப்பு நாவலில் பதிவாகியுள்ள கல்வி மறுக்கப்பட்ட சூழல், கிறித்தவ மதமாற்றம் பெற்றவர்களுக்கான சலுகைகள், புசாரி சபித்தலும் அது பலிக்கும் அதிசயங்களும், தீவட்டிக் கொள்ளைக்காரர்களுக்கு அவர்கள் கொள்ளையைத் தவிர்க்க விருந்தும் பெருவாரியான பணமும் கொடுக்கும் ஊர் வழக்கங்களும் ஆண்டிச் சாமியை முருகன் கோவிலுக்குள் அழைக்கும் கனவும் அதை மெய்ப்படுத்த ஊரார் மேற்கொள்ளும் செயல்பாடுகளும் கட்டுரையின் பொருண்மையாக்கப்பட்டுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:***

*கல்வி மறுப்பு, கிறித்தவ மதமாற்றம், சாபம், அதிசயங்கள், கொள்ளையர்களுக்கு விருந்து, கனவு*

**Abstract**

*The purpose of the article ‘Porul Saara Panbaadu in Pichipoo Novel’ is to know the cultural essence of the people of Kumari district as recorded in the Ponnilan works. Materialistic culture includes cultural elements that do not take on a material form. People’s opinions, customs, ethics, cognition, aesthetic thoughts, restrictions, exceptions, worship practices, cults, etc. are the measurements that help to measure materialistic culture. This article sets out to explore the basics of materialistic culture, such as the denial of education, concessions to converts, the priest’s curse, its sacrifice, the town’s custom of feasting on robbers, and Aandichami’s dream, as reported in Ponnilan’s novel.*

***Keywords:***

*Denial of Education, Concessions to Converts, The Priest’s Curse, Sacrifice, The Town’s Custom of Feasting on Robbers*

**Citation**

Vinotha, S. “Porul Saaraa Panbaadu in ‘Pichipoo’ Novel.’” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 20–27.

**முன்னுரை**

*இலக்கியங்கள் மானுட சமுதாயத்தைப் பதிவு செய்வதில் முக்கியப்பங்காற்றுகின்றன. அதிலும் குறிப்பாகத் தற்கால இலக்கியங்கள் சம கால மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும்சிறப்பாகப்பதிவு செய்து வருகின்றன. தற்கால இலக்கியப் படைப்பாளர்களுள் எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் தனக்கென தனித்த படைப்பாளுமையைக் கொண்டவர். குமரி மாவட்டத்து மக்களின் வாழ்வியலைத் தொடர்ந்து பதிவு செய்து வருபவர். அவரது படைப்புகளுள் பதிவாகியுள்ள குமரி மாவட்டத்து மக்களின் பண்பாட்டுச் சாராம்சமான பொருள் சார்ந்த தரவுகளை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**மானிடவியல் கோட்பாடு**

*இலக்கியம் அனுபவத்தின் அடிப்படையில் படைக்கப்படுகின்றன. தமிழிலக்கிய ஆய்வாளர்கள் அதன் நயத்தை ஆய்வு செய்த காலம் போய் இன்று அயல்நாட்டாளர்களின் கோட்பாட்டாய்வை இலக்கியத்தோடு பொருத்திக்காணும் ஆய்வுப்போக்கு தற்காலத்தில் சிறந்து வருகின்றது. இலக்கியத்தின் தன்மையை அறிவிக்கும் இத்தகைய இலக்கியக்கோட்பாடுகளுள் மானிடவியல் கோட்பாடும் ஒன்று. இக்கோட்பாடு இலக்கியத்தில் பதிவாகியுள்ள ஒரு குறிப்பிட்ட மானிட சமுதாயத்தின் வாழ்வியலைப் பதிவு செய்யத் துணை நிற்கின்றன. மனிதன் குழுவாக வாழும் இயல்புடையவன். அவனது குழு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையும் பழக்கவழக்கத்தையும் பின்பற்றி நடக்கும் அப்பண்பாடு பின்வரும் சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டலாக அமையும். மேலும் மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் அடிப்படைகளில் காணப்படும் பொதுமைகளை அடையாளங்காணவும் இவ்வகை ஆய்வுகள் பயன்படுகின்றன. சில சமுதாயத்தின் வாழ்வியல் அதனைப் பதிவு செய்யப்படா நிலையில் மறைந்து போகின்றன. இதனால் மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த பதிவை அறிவதில் இடையீடுபடும். அவ்வாறு இடையீடு படாமல் காக்கும் பணியை மனித சமுதாயத்தை ஆய்வு செய்யும் இவ்வகைக் கோட்பாடுகள் செய்கின்றன.*

**பொன்னீலன் படைப்புகளில் மானிடவியல்**

*மனித சமுதாயத்தைப் பதிவு செய்யும் இலக்கியக் கோட்பாடுகளுள் மானிடவியல் முக்கியமானது. மனித சமுதாயத்தைப் பதிவு செய்யும் படைப்பாளர்களுள் எழுத்தாளர் பொன்னீலன் தலைசிறந்தவர். அவரது படைப்புகள் குமரி மாவட்டத்து மக்களின் வாழ்வியலைப் பொதிந்து வைத்துள்ள செய்திப்பெட்டகமாக அறியப்படுகின்றன. குமரி மாவட்டத்து மக்களின் புழங்கு பொருட்கள் அவர்தம் பண்பாட்டைப் பட்டியலிடுகின்றன. அவர்களின் நம்பிக்கைகள் பொருள் சாராப்பண்பாட்டை உரைக்கின்றன. ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த, ஓரிடத்தைச் சார்ந்த வேறுபட்ட இன மக்களின் அடையாளம் பொன்னீலனின் படைப்புகளில் துல்லியமாக அடையாளப்படுகின்றன.*

**பண்பாட்டு மானிடவியல்**

*மானிடவியலின் ஒரு பிரிவாகத் திகழ்வது பண்பாட்டு மானிடவியல். இது மானிட சமுதாயத்தின் பண்பாட்டை சில அளவீடுகள் கொண்டு அளக்கின்றன. எனவே ஆய்வாளர்கள் அதனை பண்பாட்டு மானிடவியலின் வகைகள் என்று கொண்டு அதன் அடிப்படையில் ஆராய்கின்றனர். அவ்வகைகளாவன பொருள் சார் பண்பாடு மற்றும் பொருள் சாராப்பண்பாடு போன்றவை ஆகும். பொருள் சார் பண்பாடு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வாழ்விடச்*

*சூழல் புழங்கு பொருட்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டை நிறுவுகின்றன. திருவிழாக்கள் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் போன்றவை பொருள் சாரா நிலையில் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டைப் பதிவு செய்கின்றன. அவ்வகையில் பொன்னீலனின் படைப்புகளில் பதிவாகியுள்ள குமரி மாவட்டத்து மக்களின் பொருள் சார் மற்றும் பொருள் சாராப் பண்பாட்டை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**பொருள் சாராப்பண்பாடு**

*பண்பாடு என்பது மக்களின் இயக்கத்தின் வழி அறிவது. மக்கள் புழங்கக்கூடியய பொருள் சார்ந்தோ அல்லது மக்களின் பழக்கவழக்கத்தின் வெளிப்பாடாக அமையும் பொருள் சாராப்பண்பாடாகவோ பதிவாகும். எனவே பண்பாட்டைப் பொருள் சார் பண்பாடு என்றும் பொருள் சாராப்பண்பாடு என்றும் வகைப்படுத்துவது பண்பாட்டு மானிடவியல் ஆயவு வழக்கு. பொருள் சார் பண்பாட்டில் மக்களால் செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமே இடம்பெறும். எனவே அவை கலை வடிவங்கள் இல்லது பொருள் வடிவங்கள் எனக் குறிக்கப்பெறும். பொருள் சாராப்பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக்கூறுகளும் உள்ளடங்கும்.*

1. *மக்களின் கருத்துகள்*
2. *பழக்கவழக்கங்கள்*
3. *நெறிமுறைகள்*
4. *அறிதிறன்*
5. *அழகியல் சிந்தனைகள்*
6. *கட்டுப்பாடுகள்*
7. *விலக்குகள்*
8. *வணக்கம் செலுத்தும் முறை*
9. *வழிபாட்டு முறைகள்*

*போன்றவை பொருள் சாராப்பண்பாட்டை அளக்க உதவும் அளவீடுகள் ஆகும்.*

**பிச்சிப்பூ நாவலில் கட்டுப்பாடுகள்**

*பிச்சிப்பூ நாவலில் உயர்சாதி தாழ்ந்த சாதி என்ற சாதி வேறுபாட்டின் காரணமாக கல்வி மறுக்கப்பட்டுள்ளது. அப்படியே கல்வி பெறும் வாய்ப்பு கிடைத்தாலும் அதற்குரிய பணி வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்தில் இருவர் பி.ஏ பட்டம் முடித்தனர். ஒருவர் நாயர் சாதியைச் சார்ந்தவர். இன்னொருவர் ஈழவர். உயர் சாதியைச் சார்ந்த நாயர் மாணவனுக்கு தாசில்தார் பதவி கிடைத்துள்ளது. ஈழவ மாணவனுக்கு பதவி மறுக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த சாதியைச் சார்ந்தோருக்கு அதிகாரிப்பதவி கிடைத்தால் கோவில்களுக்குள் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே அவர்களுக்குப்பதவி மறுக்கப்பட்டுள்ளது. இதனை*

> *“நீ ஈழவன் எங்கதுனால சர்க்கார் வேலை கிடைக்காது. ஏனுன்னா, சர்க்கார் வேலையில இருக்கவன் சர்க்கார் ஆபீஸ்க, கோயில்க எல்லாத்துக்குள்ளேயும் போக வர வேண்டியதிருக்கும்.”*[1]

*என்னும் வரிகள் சர்க்கார் பணிகளில் இருப்பவர் கோவில்களில் பிரவேசிக்க வேண்டி இருப்பதால் கோவில்களுக்குள் நுழையும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்குச் சர்க்கார் பணி கொடுக்கப்படுவதில்லை என்னும் கட்டுப்பாட்டைப் புலப்படுத்துகின்றது.*

**விலக்குகள்**

*சர்க்கார் பணிகளில் இருப்பவர் கோவில்களில் பிரவேசிக்க வேண்டி இருப்பதால் கோவில்களுக்குள் நுழையும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்குச் சர்க்கார் பணி கொடுக்கப்படுவதில்லை என்னும் சாதீய கட்டுப்பாட்டிலிருந்து கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த தமிழர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை*

> *"அப்படி உனக்கு அரசாங்க வேலை பாக்கணுமுன்னு விருப்பம் இருந்தா நீ கிறிஸ்தவனா மாறிக்க. கிறிஸ்தவனா மாறுனா உனக்கு அரசாங்க வெலை தரலாம்"*[2]

*என்னும் வரிகள் புலப்படுத்துகின்றது. இவ்வாறு இந்துக்களாய் இருக்கும் ஈழவர்களுக்கு மறுக்கப்படும் அரசாங்கப்பணி அவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சாரும் போது தங்களது கட்டுப்பாட்டை விலக்கிக்கொள்கின்றனர்.*

**அதிசயங்கள்**

*மக்கள் வாழ்வில் நடக்கும் அதிசய நிகழ்வுகளும் பொருள் சாராப்பண்பாட்டின் கீழ் வைத்து வரையறுக்கப்படுகின்றது. பிச்சிப்பு நாவலில் ஐயா வைகுண்டர் என்று சொல்லப்படும் முத்துக்குட்டியின் வாழ்வில் நடைபெற்ற அதிசயங்கள் பல இடம்பெற்றுள்ளது. அவரது 21வது வயதில் அவருக்குத் தீராத நோய் கண்டு தொட்டில் கட்டித் திருச்செந்தூருக்குத் தூக்கிச் சென்றனர். அங்கே கடலில் குளிக்கப்போன முத்துக்குட்டி நாலாவது நாள் கரையேறினார். வெளியில் வந்து தன்னை லட்சுமியும் நாராயணரும் கடலில் அழைத்துச் சென்று பல உபதேசங்கள் செய்ததாகவும் கூறியுள்ளார். இதனை*

> *"அம்மா நான் இப்ப புதுமனுசனாயிட்டேன். நாராயணனாரும் லட்சுமி அம்மையும் என்னையக் கடலுக்குள்ள அழச்சிட்டுப் போயி பல உபதேசங்க செய்து திரும்ப ஆனுப்பி வச்சாக."*[3]

*என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.*

*மேலும் அவரது தெய்வத்தன்மையின் மீது சந்தேகமும் பகைமையும் உற்ற அந்த ஊர் நம்புதிரி அவரைச் சிறைப்பிடித்தார். காட்டிலிருந்து ஒரு கடுவாயைப் பிடித்து வந்து அதனைப்பல நாட்கள் பட்டினி போட்டு முத்துக்குட்டி இருந்த சிறைக்குள் போட்டனர். ஆனால் அந்தக்கடுவாய் அவரை ஒன்றும் செய்யாமல் அவரது காலடியில் படுத்துக் கொண்டதாகவும் பதிவாகியுள்ளது. அதனைப் பார்த்துக் கொண்டிருந்த நம்பூதிரி கோபத்தோடு அக்கடுவாயைச் சிறையின் ஜன்னலிலிருந்து கம்பியால் குத்த அது அக்கம்பியை இழுத்துப் பிடித்துக்கொண்டு விசையோடு விட அக்கம்பி நம்புதிரியின் மார்பிலே குத்தி அவர் அவ்விடத்திலே இறந்து போனார். இங்கு கோபத்தோடும் பசியோடும் இருந்த கடுவாய் வைகுண்டரை ஒன்றும் செய்யாததோடு அவரைச் சுற்றி வந்து அவரது காலடியில் படுத்துக் கொண்டதும் பிச்சிப்பு நாவலில் பதிவாகியுள்ள அதிசயங்களில் ஒன்றாகும். இதனை*

> *"பசி பொறுக்காமக் கூட்டுக்குள்ள கடுவாய் உறுமிக்கிட்டுச் சுத்திச்சுத்தி வந்தது. ஆனா, முத்துக்குட்டியஅ து கடிக்கவே இல்ல. அவர் காலடியில போயி சுருண்டு படுத்துக்கிட்டுது"*[4]

*என்னும் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.*

*மேலும் ஒரு கார்த்திகை மாதம் ஊருக்குள் பேதி நோய் பரவ அம்மன் கொண்டாடியாரு அம்மனுக்குப் படைத்த கருப்பட்டியையும் தண்ணியையும் நோயாளிகளுக்குக் கொடுக்க*

*ஆநாய் வந்த எல்லாருமே படிப்படியாகத் தேறியதாகவும் கூறியிருப்பது இப்புதினத்தில் பதிவாகியுள்ள மேலுமொரு அதிசயமாகும்.*

**வழக்கங்கள்**

*நாஞ்சில் நாட்டின் எழுதப்படாத பழக்கவழக்கங்கள் பல உண்டு. அதில் ஒன்று கொள்ளைக்காரர்களின் வழக்கம். தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அடிக்கடி ஊருக்குள் வருவார்கள். அவ்வாறு வருவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு ஊர்த்தலைவரின் வீட்டு வாசலில் ஒரு ஓலை இலக்குல "நாங்கள் இன்ன நாள் இராத்திரி கொள்ளையடிக்க வருவோம் என்று எழுதிவைத்துவிட்டுச் சென்றுவிடுவராம். ஊர்த்தலைவர் ஊரைக்கூட்டி ஆலோசிப்பாராம். எவ்வளவு தங்கம், பணம் கொடுத்தால் கொள்ளைக்காரர்கள் திரும்பிப்போவார்கள் என உத்தெசதாகக் கணித்து அவரவர்களால் இயன்றதை வைத்துவிட்டு கறிச்சோறு சமைத்து வைத்துவிட்டுச் சென்றுவிடுவார்களாம். கொள்ளையர்கள் ஊரார் வைத்துச் சென்ற பணம் தங்களுக்குப் போதுமானது என்று கருதினால் விருந்து சாப்பிட்டுவட்டுப் பணத்தையும் எடுத்துச் சென்றுவிடுவார்களாம். அவர்கள் திருப்தி ஆகாவிட்டால் ஊரையே கொளுத்திவிட்டுச் சென்றுவிடுவார்களாம். இத்தகைய வழக்கம் பிச்சிப்பு நாவலில் பதிவாகியுள்ளது.*[5]

**நம்பிக்கைகள்**

*பிச்சிப்பூ நாவலில் சில நம்பிக்கைகளும் பதிவாகியுள்ளன. கதைத்தலைவனான மூர்த்தியார் மாட்டுவண்டிப்பயணத்தின் போது இடையில் மாட்டை இளைப்பாறவிட்டு அதற்கு வைக்கோல் எடுக்க வைக்கோல் தொட்டிலில் கைவிடுகிறார். அப்போது அவர் கைகளில் ஒரு மனிதத்தலை அகப்படுகிறது. இது பொன்று வைக்கோல் தொட்டிலுக்குள் நடுக்காட்டு இசக்கி வந்து படுத்துக்கிடப்பாள் என்றும் தலைமுடியைப் பிடித்து வண்டிக்காரன் ஈழுக்கும் சமயத்தில் அவர்களின் மேலே பாய்ந்து ஒரே அடியா நெஞ்சுல அடிச்சிக் கொன்று இரத்தம் குடித்துவிட்டு ஆகாய மார்க்கமாகப் பறந்துவிடுவாள் என்றும் இந்நாவல் நாஞ்சில் மக்களின் நம்பிக்கையைப் பதிவு செய்துள்ளது.*[6]

*மேலும் அவ்வுர் சாமியாடியார் மீது பொறாமையுற்ற கருங்குளம் ஊரின் இளைஞர்கள் சிலர் சாமியாடி அம்மன் அவர் மீது ஏறி ஆராசனையுற்ற போது ஒரு பித்தளைச்சட்டியில் நெருப்பை வளர்த்து அவர் அச்சட்டியைத் தூக்கி மூன்று முறை கோவிலை வலம் வந்தால் மட்டுமே அவர் மீது அம்மன் ஏறியிருப்பதாக ஒத்துக்கொள்வோம் என்றும் கூறுகின்றனர். அம்மன் கொண்டாடியாரும் அவ்வாறே நெருப்பேறிய பித்தளைச்சட்டியை ஏந்தி கோவிலை மூன்றுமுறை சுற்றி வந்து இறக்கிவைத்துவிட்டு அடுப்புக்குள் கையைவிட்டு நெருப்பை அள்ளி கருங்குளத்தைப் பார்த்து வீசியதாகவும் எழுதியுள்ளார் ஆசிரியர். மேலும் அதனைத்தொடர்ந்து ஏழு நாட்கள் பெய்த கடும் மழையில் அவ்வுர் அடியோடு அழிந்ததாகவும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இவ்வாறு நாஞ்சில் நாட்டு மக்களின் நம்பிக்கையும் பிச்சிப்பு நாவலில் பதிவாகியுள்ளது.*[7]

**கனவுகள்**

*பிச்சிப்பூ நாவலில் கனவுகளும் பதிவாகியுள்ளன. இசங்கன் குளத்தைச் சார்ந்தவர் ஆண்டிச்சாமி. அவரது கனவில் வள்ளி தெய்வானை சகிதம் முருகன் அவருக்குக் காட்சி அளித்ததாகவும் அவரது பக்தியை மெச்சி முறைப்படி விரதமிருந்து குமார கோவில்*

சன்னதிக்கு வர வேண்டும் என்று கட்டளையிட்டதாகவுமான கனவு ஒன்று அவருக்கு மறுபடி மறுபடி வந்து ஏதோ செய்தி சொல்வதாகவும் ஆண்டிச்சாமி உணர்வதாக இந்நாவல் பதிவு செய்துள்ளது.[8]

**தொகுப்புரை**

1. பொருள் சாராப்பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக்கூறுகளும் உள்ளடங்கும்.
2. சர்க்கார் பணிகளில் இருப்பவர் கோவில்களில் பிரவேசிக்க வேண்டி இருப்பதால் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தோருக்குச் சர்க்கார் பணி கொடுக்கப்படுவதில்லை என்னும் கட்டுப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.
3. ஈழவர்களுக்கு மறுக்கப்படும் அரசாங்கப்பணி அவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சாரும் போது தங்களது கட்டுப்பாட்டை விலக்கிக்கொள்கின்றனர்.
4. தீவட்டிக் கொள்ளையர்களின் வழக்கங்களும் மக்களின் நம்பிக்கைகளும் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு நடக்கும் அதிசயங்களும் நிறைவேறாத ஆசையினால் தூக்கத்தில் வரும் கனவுகளும் பிச்சிப்பு கதை எங்கும் விரவிக்கிடக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. பொன்னீலன், பிச்சிப்பு - ப.12
2. மேலது
3. பொன்னீலன், பிச்சிப்பு - ப.25
4. பொன்னீலன், பிச்சிப்பு - ப.27
5. பொன்னீலன், பிச்சிப்பு - ப.51
6. பொன்னீலன், பிச்சிப்பு - ப.61
7. பொன்னீலன், பிச்சிப்பு - ப.41
8. பொன்னீலன், பிச்சிப்பு - ப.69

**துணைநூற் பட்டியல்**


1. பக்தவத்சல பாரதி, 2016. ''பண்பாட்டு மானிடவியல்'' மெய்யப்பன் பதிப்பகம்.
2. தனஞ்செயன், ஆ. 1996. குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும். பாளையங்கோட்டை: அபிதா பப்ளிகேசுன்ஸ்.
3. பக்தவத்சல பாரதி, 2002. தமிழர் மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
4. முத்தையா,இ.1996, நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும். மதுரை: அரசு பதிப்பகம்.
5. ஸ்டீபன்,ஞா. 1999. பண்பாட்டு வேர்களைத் தேடி. பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்.
6. இராமச்சந்திரன், நா.1988.: நாட்டார் கதைகளின் அமைப்பியல் ஆய்வு: ''உத்திகளும் நெறிமுறைகளும்''. நாட்டார் வழக்காற்றியல்.
7. இராமநாதன், ஆறு.1997. ''நாட்டுப்புறஇயல் ஆய்வுகள்''. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
8. சிவசுப்பிரமணியன்,ஆ.1999. ''மந்திரங்களும் சடங்குகளும்''. சென்னை: மக்கள் வெளியீடு.

9. செயபதி, பிரன்சிஸ். 1999. "பழமைச்சமூகங்களில் தகவல் தொடர்பு". கிறிஸ்டியன் பேட்டை: சோலை இயக்கம்.
10. ஞானசேகரன்,தே.2000. மந்திரம், சடங்குகள், சமயம். திருச்சிராப்பள்ளி: பார்த்திபன் பதிப்பம்.
11. செல்ல பெருமாள்,ஆ. 1988. "உறவுமுறைகளின் அடிப்படை அமைப்பு" நாட்டார் வழக்காற்றியல்.
12.பெனிடிக்ட்,ரூத்.1964."பண்பாட்டுக்கோலங்கள்" சென்னை:தமிழ்வெளியீட்டுக்கழகம்.
13. பஞ்சாங்கம்,க. 1994. "பெண்ணெனும் படைப்பு: சில மானுடவியல் குறிப்புகள். புதுச்சேரி: செல்வன் பதிப்பகம்.
14. லூர்து,தே. 1997. நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள். பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்.
15. பரமசிவன்,தொ.2001. பண்பாட்டு அசைவுகள். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
16. சுந்தர்,கா. 1994 "அன்னங்கறி இன்னதிது: சடங்கார்ந்த உணவும் சமூகமும் பற்றிய சில குறிப்புகள்". பரல்கள், பதிப். நாகநந்தினி, இன்னும் பலர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாரள் மன்றம்.
17.முத்துக்குமாரசாமி, எம்.டி. 1988. பிற்கால அமைப்பியலும் குறியியலும். பாளையங்கோட்டை: தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி.
18. முத்துமோகன்,ந. 1998. அமைப்பியல் பின் அமைப்பியல். பெங்கர்: காவ்யா பதிப்பகம்.
19. மகேசுவரன்,சி.1985. "பச்சைமலை மலையாளிகள்: ஓர் இனவியல் அறிமுகம்". ஆராயசசி 24
20. பக்தவத்சல பாரதி. 2014. "இலக்கிய மானிடவியல்" அடையாளம் பதிப்பகம்.

## References

1. *Bhakthavathsala Bharathi, 2016. "Panbaatu Maanidaviyal" Meiyappan Publication.*
2. *Dhananjeyan. A. 1996. "Kulakuriyiyalum Meenavar Valakkaarugalum", Palayankottai, Abitha Publications.*
3. *Bhakthavathsala Bharathi, 2002. "Tamilar Maanidaviyal" Meiyappan Publication.*
4. *Muthaiah. I. 1996, "Naatupurasadangugalum Manidha Uravugalum:, Madurai: Arasu Publication.*
5. *Stephen. G, 1999. "Panbaatu Vergalaithedi", Palayankottai, Folklore Research Centre.*
6. *Ramchandran. N, 1988, :Naataar Kadhaigalin Amaipiyal AAivu – Uthigalum Nerimuraigalum", Palayankottai, Folklore Research Centre.*
7. *Ramanathan. Aru.1997. "Naatupuraviyal Aaivugal", Chennai: Manivasagar Publication.*
8. *Sivasubramaniam. A.1999, "Mandhirangalum Sadangugalum", Chennai, Makkal Veliyeedu.*
9. *Seyapathi, Francis.1999, "Pazhamaichamoohangalil Thagaval Thodarbu", Christian Pettai, SolaiIyakkam.*
10. *Gnanasekaran. T. 2000, "Mandhiram, Sadangugal, Samayam", Trichy: Parthiban Publication.*

11.*Sella perumal. A, 1988, "Uravumuraigalin Adippadai Amaippu" Palayankottai, Folklore Research Centre.*
12.*Benedict. Ruth. 1964, "Panbaatu Kolangal" Chennai, Tamil Veliyeetu Kazhagam.*
13.*Panjaangam. K. 1994. "Pennenum Padaippu - Sila Maanidaviyal Kurippugal", Puduvherry: Selvan Padhippagam.*
14.*Loordhu. T. 1997. "Naataar Vazhakkatriyal – Sila Adippadaigal" Palayankottai, Folklore Research Centre.*
15.*Paramasivan. T. 2001. "Panbaatu Asaivugal", Kaalasuvadu Padhippagam.*
16.*Sundar. K. 1994, "Annangari Innadhidhu – Sadangaarndha Unavum Samoogamum Patriya Sila Kurippugal" – Paralgal, Madurai Kamarajar University Tamil Research Studies.*
17.*Muthukumaraswamy, M.D, 1988, "Pirkaala Amaipiyalum Kuriyiyalum" Palayangottai, St.Xavier's Autonomous College.*
18.*Muthu Mohan.N. 1998, "Amaippiyal Pin Amaippiayal" Bangalore, KavyaPadhippagam.*
19.*Maheswaran.S.1985, "PachaimalaiMalaiyaligal – Oar InaviyalArimugam" – Aaraaichi 24.*
20.*BhagthavathsalaBharathi.2014."IlakkiyaMaanidaviyal"AdaiyaalamPadhippagam.*